# பாரதமணி

மணி - 25 ஓசை - 9 & 10 ஏப்ரல் & மே - 2012 விலை ரூ.10



காந்திஜி தலைமையில்
தண்டி
உப்பு சத்தியாகிரக
யாத்திரை





ராஜாஜி தலைமையில் வேதாரண்யம்
உப்பு சத்தியாகிரக யாத்திரை



# புதிய காந்தி ஆராய்ச்சி மையம்

பாரத ஜனாதிபதி ஸ்ரீமதி பிரதிபா பாட்டில் மகாராஷ்டிர மாநிலம் ஜலகான் என்னும் ஊரில் மார்ச், 25, 2012 அன்று உலகத் தரத்திலான ஒரு காந்திஜி ஆராய்ச்சி மற்றும் கண் காட்சியகத்தை மனித இனத்தின் நன்மைக்காக திறந்து வைத்தார். இதன் பெயர் "காந்தி தீர்த்" (Gandhi Theerth) என்பதாகும்.



டாக்டர் பாவர்லால் ஜெயின், ஜனாதிபதிக்கு ஒரு காட்சிப் பொருளைப் பற்றி விளக்குகிறார்.

காந்தி ஆராய்ச்சி மையம் மற்றும் ஜெயின் இரிகேஷன் ஸிஸ்டம்ஸ் இணைந்து இதை நிறுவியுள்ளனர்.

இதன் அர்ப்பணிப்பு விழாவில் மகாராஷ்டிரா கவர்னர் டாக்டர் K. சங்கரநாராயணன், கல்வியாளர் தேவ்சிங் ஷெகாவாத், காந்தி தீர்த் தலைவர் ஜஸ்டிஸ் தர்மாதிகாரி, காந்தி தீர்த் நிறுவனரும் தொழிலதிபருமான Dr. பவர்லால் ஜெயின், டிரஸ்டி D.R. மேத்தா, ஸ்ரீலங்கா சர்வோதய இயக்கத் தலைவர் Dr. அரிரத்னே, காந்திய ஆர்வலர்கள் H.S. துரைசாமி மற்றும் நாராயணராவ் ஸாவே, ஆகியோருடன் இந்தியாவின் பல இடங்களிலிருந்தும் பல வெளிநாடுகளிலிருந்தும் வந்த காந்திய ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.



டாக்டர் பாவர்லால் ஜெயின், ஜஸ்டிஸ் தர்மாதிகாரி மற்றும் முக்கிய விருந்தினர்களுடன் ஜனாதிபதி பிரதீபா பாட்டீல்.

இவ்விழாவில் பேசும் போது டாக்டர் பவர்லால் தன்னுடைய இளமைக்கால கனவான காந்திஜி பற்றிய உலகளாவிய நிறுவனம் அமைக்க வேண்டுமென்பது நிறைவேறியதில் மிக்க மகிழ்ச்சி அடைவதாகக் கூறினார்.

ஜெயின் இரிகேஷன் ஸிஸ்டம்ஸ் இந்திய கிராமங்களின் மேம்பாட்டை குறிக்கோளாக கொண்ட நிறுவனமாகும்.

ஜலகான் ஜனாதிபதி பிரதிபா பாட்டீலின் பிறந்த ஊர் என்பது குறிப்பிடத்தக்கது.